# பட்சிதீர்த்தம் என வழங்கும்

# அருள்மிகு திரிபுரசுந்தரி உடனுறை அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில்

(நால்வராலும் பாடல் பெற்ற திருக்கோயில்)

திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம் மாவட்டம்



## திருக்கோயில் பற்றிய சிறு குறிப்பு

திருக்கோயில் வெளியீடு

# அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில்

## திருக்கழுக்குன்றம்.

### திருக்கோயில் அமைவிடம் :

திருக்கழுக்குன்றம் எனும் புனிதத்தலம் தமிழ்நாட்டில், செங்கல்பட்டிற்கு தென்கிழக்கே செங்கல்பட்டு கல்பாக்கம் மற்றும் செங்கல்பட்டு மாமல்லபுரம் நெடுஞ்சாலையில் 14-வது கிலோ மீட்டர் தொலைவில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. திருக்கழுக்குன்றத்திற்கு உருத்திரகோடி என்றும் நந்திபுரி என்றும் இந்திரபுரி என்றும் நாராயணபுரி என்றும் பிரமபுரி என்றும் தினகரபுரி என்றும் முனிகணபுரி என்றும் பட்சிதீர்த்தம் என்றும் வேறு பெயர்கள் உண்டு.

| | | |
|---|---|---|
| சுவாமியின் திருப்பெயர் | : | **அருள்மிகு வேதகிரீஸ்வரர்** |
| அம்பாளின் திருப்பெயர் | : | **அருள்மிகு திரிபுரசுந்தரி** |
| தீர்த்தம் | : | **சங்கு தீர்த்தம்** |
| தல விருட்சம் | : | **கதலி (வாழை மரம்)** |
| ஆகமம் | : | **காமீகம்** |

### இதர சிறப்பு

- சமயக் குரவர்கள் நால்வராலும் பாடல் பெற்ற தலம்.
- பட்டினத்தார், அருணகிரிநாதர், திருப்போரூர் சிதம்பரம் சுவாமிகள், அந்தகக் கவி வீரராகவ முதலியார், இராமலிங்க அடிகளார், இராமநாதபுரம் சோமசுந்தரம் பிள்ளை, காஞ்சிபுரம் மகாவித்வான் சபாபதி முதலியார் ஆகியோராலும் பாடல் பெற்ற தலம்.
- தினமும் இரு புனித கழுகுகள் திருமலைக்கு மேல் வந்து உணவருந்திச் செல்கின்றன.
- பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை, மார்க்கண்டேயர் முனிவர் தவம் செய்த சங்கு தீர்த்தத் திருக்குளத்தில் அவருக்காகத் தோன்றிய சங்கு தவறாது பிறந்து வருகிறது.

- திருமலைமேல் அருள்மிகு வேதகிரீஸ்வரரை இந்திரன் இடி அபிஷேகம் மூலம் பூசித்து வருகின்றார்.
- சுரகுரு மன்னன் இறைவனை வழிபட்டு சாமீப்பியபதம் பெற்றான்.
- இத்தலம் திருமால், பிரம்மா வழிபட்ட தலமாகும்.
- பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை குரு - கன்னி இராசியில் பிரவேசிக்கும் திருநாளன்று இலட்ச தீபப் பெருவிழா - புஷ்கர மேளா நடைபெறுகின்றது.
- அருள்மிகு திரிபுரசுந்தரி அம்பாளுக்கு ஆண்டு முழுவதும் பாத அபிஷேகம் மட்டுமே. வருடத்தில் ஆடி மாதத்தில் உத்திரத்திலும் புரட்டாசியில் நவமியிலும் பங்குனியில் உத்திரத்திலும் ஆக மூன்று முறை மட்டுமே முழு மகாபிஷேகம் நடைபெறுகிறது.
- திருமலையில் சஞ்சீவிக் காற்று வீசுவதால், இம்மலையை தொடர்ந்து ஒரு மண்டலம் (45 நாட்கள்) வலம் வந்தால் தீராத நோய்கள் யாவும் தீரும். மகப்பேறுகள் இல்லாதவர்க்கு மகப்பேறு உண்டாகும்.
- சிவபெருமான் மேனியினின்று தோன்றிய உருத்திர கோடியர், அரக்கர்களை வதம் செய்து அப்பாவம் போக்க , இறைவனை வழிபட்ட இடம். அவர்கள் பெயரால் **"உருத்திரகோட்டி"**, **"ருத்ரான் கோயில்"** என இன்றும் அழைக்கப்பட்டு வருகிறது. இங்கு எழுந்தருளியுள்ள அருள்மிகு உருத்திர கோடீஸ்வரர் தலம் மிகவும் பழமையும், தொண்மையும் வாய்ந்ததாகும்.

## தல வரலாறு

இத்தலம் சிவ நெறியாளர்களுக்கு முதன்மையான புகழ்மிக்க பெரிய தலமாகும். சைவ சமய குரவர்கள் நால்வராலும் மற்றும் பல அருளாளர்களாலும் பாடல் பெற்ற தலம். தொண்டை நாட்டில் தேவாரம் பெற்ற முப்பத்திரண்டு சிவ தலங்களுள் முதன்மையானது திருக்கழுக்குன்றமாகும். வேதங்கள் நான்கும் மலையுருவாக இருந்தமையால் இத்தலம் **வேதகிரி** எனப் பெயர் பெற்றது.

இத்திருக்கோயில் ஏழாம் நூற்றாண்டில் அதாவது கி.பி.610-640-ல் பல்லவ மன்னர்களில் புகழ்பெற்ற மகேந்திரவர்மப் பல்லவனால் கட்டப்பெற்றதாகும்.

## கழுகு முனிவர்கள் வரலாறு :

நான்காவது கலியுக கால துவக்கத்தில் பூடா, விதாதா எனும் இரு முனிவர்கள் இறைவனை நோக்கிக் கடும் தவம் புரிந்தனர். இவர்களது தவத்தினை மெச்சிய இறைவன் அவர்கள் முன் தோன்றி, "சாரூப பந்தத்தை" அவர்களுக்குத் தந்து அருளினார். ஆனால் முனிவர்களோ தங்களுக்கு "சாயுச்சியத்தைத்" தரும்படி வாதாடினார். இறைவன் வழங்கிய அருளை ஏற்க மறுத்த முனிவர்கள் மீது கோபம் கொண்டு, அவர்களை "கழுகு" வடிவமாக மாற சபித்தார். முனிவர்கள் இருவரும் தமது தவற்றை உணர்ந்து, தங்களை மன்னித்தருள இறைவனிடம் வேண்டினர். இறைவன் "நீங்கள் காசிப முனிவரிடத்தில் இரு கழுகுகளாகப் பிறந்து, திருக்கழுக்குன்றம் மலை மீது எழுந்தருளியுள்ள "வேதகிரீஸ்வரரை" தினமும் வழிபடுங்கள். கலியுக முடிவில் சுய உருவம் பெற்று முக்தி அடைவீர்கள்" என சாப விமோசனத்திற்கு வழியும் கூறி அருளினார் அதற்கேற்ப இன்றளவும் தினமும் இரு கழுகுகளும் திருமலை மேல் பறந்து இறைவனை வழிபட்டு உணவருந்திச் செல்லும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

## திருமலை வலம் வரும் பெருமை

கொடிய நோய் உள்ளவர்களும், மருத்துவர்களால் கைவிடப்பட்டவர்களும், திருமலையைச் சுற்றி ஒரு மண்டலத்திற்கு வலம் வந்தால், நோய்கள் தீர்ந்துவிடுவது இன்றளவும் நடந்து வருகின்றது. அதே போன்று மகப்பேறு இல்லாதவர்களும், ஒரு மண்டலம் திருமலையை சுற்றி வலம் வந்தால், மகப்பேறு உண்டாகும். அவ்வாறு பிறந்தவர்தான் சுவாமியின் பெயரான "வேதாசலம்" என பெயர் வைத்து பின் "மறைமலையடிகளார்" என மாற்றிக்கொண்ட அடிகளார் ஆகும். தற்போது ஒவ்வொரு "பௌர்ணமி" அன்றும் இலட்சக்கணக்கான மக்கள் வருகை தந்து "கிரிவலம்" வருகின்றனர்.

## அருள்மிகு திரிபுரசுந்தரி :

திருமலையின் அடிவாரத்தில், தாழக்கோயில் என வழங்கப்பெறும் தலத்தில் எந்தருளியுள்ள அருள்மிகு "திரிபுரசுந்தரி" தன்னை நாடி வேண்டுபவர்க்கு - வேண்டிய வரங்கள் வழங்கி அருள்பாலித்து வருகின்றார். அம்மனுக்கு ஆண்டில் மூன்று முறை மட்டுமே முழு அபிஷேகம் ஆகும். மற்றைய தினங்களில் திருபாதத்திற்கு மட்டுமே அபிஷேகமாகும்.

## சங்கு தீர்த்தம்

மார்க்கண்டேய முனிவர் தவம் செய்த சங்கு தீர்த்தத்தில் அவருக்காகத் தோன்றிய சங்கு பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை இன்றளவும் தவறாது பிறந்து வருகின்றது. நோயுள்ளவர்கள், பெருநோய் உள்ளவர்கள், பித்து முதலிய கோளாறு உள்ளவர்கள் ஒரு மண்டலம் இத்தீர்த்தத்தில் நீராடி - மலை வலம் வந்து - திருமலை மேல் சென்று இறைவனை வழிபட்டால் அனைத்து நோய்களும் நீங்கி நலம் பெறுவர் என்பது இன்றளவும் கண்கூடாக நடந்து வருகின்றது. 12 ஆண்டுகட்கு ஒரு முறை குரு கன்னி இராசியில் பிறக்கும் திருநாளன்று "சங்கு தீர்த்தப் புஷ்கர மேளா - இலட்சதீபப் பெருவிழா இத்திருக்குளத்தில் மிகச்சிறப்பாக நடைபெறும்.

கொன்று செய்த கொடுமையாற்பல சொல்லவே
நின்ற பாவ வினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றினோடு பிடிசூழ்தண் கழுக் குன்றமே !

என சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியபடி திருக்கழுக்குன்றம் திருமலை மேல் எழுந்தருளியுள்ள அருள்மிகு வேதகிரீஸ்வரரை அடிக்கடி தொழுது வந்தால், அனைத்து செல்வங்களும் கிடைக்கப்பெறும். மகப்பேறு உண்டாகும். தீராத நோய்கள் யாவும் நீங்கும்.

எனவே வேண்டியவர்க்கு வேண்டிய வாங்கு அருள்புரியும் அருள்மிகு வேதகிரீஸ்வரரையும், அருள்மிகு திரிபுரசுந்தரி அம்மனையும் அடிக்கடி வழிபட்டு, அனைத்து நலன்களையும் அடைய அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.